1973 பிப்ரவரி 5]

ஒடப்பேரிக் கால்வாய் நீர்த்தேக்கம்

* 12 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், ஈகுவார்பாளையம் அருகில் ஒடப்பேரிக் கால்வாயின் மேல் கட்டப்பட வேண்டிய சிறிய நீர்த்தேக்க அணைத் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டம் பாசனத் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : இந்தத் திட்டத்தின் மதிப்பீடு என்ன? தண்ணீர் வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது. கொஞ்சம் விரைவாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இயலுமா? இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதற்கு அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டம் இப்பொழுது பரிசீலனையில் இருந்துவருகிறது. இந்தத் திட்டம் இயலக்கூடும் என்று தெரிய வந்தால் இதற்கு மதிப்பீடு ரூ. 2 லட்சம் ஆகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திட்டம் பரிசீலனைக்குப் பிறகு அரசுக்கு வந்தவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கிழக்குக் கடற்கரைச் சாலை

* 13 வினா—திரு. அ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிழக்குக் கடற்கரைச் சாலைக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள வழி, நாகூர், நாகப்பட்டினம் நகரம் வழியாகச் செல்லவில்லையென்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உத்தேச கிழக்கு கடற்கரை சாலை அமைப்பு நாகூர், நாகப்பட்டினம் நகர்புறங்களின் வழியே செல்லுகிறது.